அண்ணா அறிவாலயம் ஜனநாயகத்தின் சரணாலயம்!

"சாம்ராஜ்யங்களின் சவக்குழி" என்று சரித்திரம் குறித்து வைத்துள்ள தலைநகர் டில்லியின் "ஜந்தர் மந்தரில்" இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரை பதவிநீக்கம் செய்யுமாறும், கைது செய்யுமாறும் வலியுறுத்தி போராட்டங்களை முன்னெடுத்த காக்ரோச் ஜனதா கட்சியின் (CJP) முன்னணி செயல்வீரர்களான அசுதோஷ்ரங்கா, சவுரவ்தாசு ஆகியோரை கைது செய்த காவல்துறை நடவடிக்கைக்கு எதிராகவும், அவர்கள் மீதான போராட்டம் ஜனநாயகவழியில் மரபுகளையும், மாண்புகளையும் எந்த வகையிலும் மீறாமல் உரிய சட்டதிட்ட வட்டத்திற்குள் நடந்து வருவதையும் தெளிவுபடுத்தியும், அவர்களை கைதுசெய்து சிறைக்கு அனுப்பியிருப்பது அப்பட்டமான ஜனநாயக விரோத நடவடிக்கை என்பதை திராவிட முன்னேற்றக்கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதிப்படுத்தும் வகையில் அறிக்கையினை வெளியிட்டிருப்பதை அனைவரும் அறிவர்.

மேலும் காக்ரோச் ஜனதாக் கட்சி தலைவர்களின் கைது நடவடிக்கையினை கண்டித்து தனது அறிக்கையில் அசுதோஸ்ரங்கா மற்றும் சவுரவ்தாசு ஆகியோருக்கு, தனது ஆதரவும் தோழமையும் உண்டு என்பதோடு அவர்களுக்குத் தேவையான அனைத்து சட்டஉதவிகளை வழங்கவும், வழக்கறிஞர்களை ஏற்பாடு செய்யவும் திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக உள்ளது என்றும் தங்கள் இயக்கத்தின் சார்பாக அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என்ற நல்லெண்ணத்தையும் உறுதிப்படுத்தி யுள்ளார்கள்.

இந்த அறிக்கைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் தலைவர் அபிஜித்தீப்கே தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இந்த அறிக்கையின்மூலம் தங்கள் இயக்கத்தின் சார்பாக நன்றி தெரிவித்து தங்கள் உள்உணர்வை வெளிப்படுத்தி யுள்ளார்கள்.

தற்போதைய அரசியல் சூழலில் ஆதாயம் தேடும் தூக்கணாங் குருவிகளாக பல்வேறு சக்திகள் லாபநட்ட கணக்குப் பார்த்து இடம் மாறுவதும், அணி சேருவதுமாக உள்ள நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இந்த அறிக்கை வருங்கால சமுதாயத்திற்கு மைல்கல்லாகவும் எதிர்கால வார்ப்படங்களாவும் உருவாக்கும் இருபால் இளைஞர்களுக்கு புத்துணர்வையும், எழுச்சியையும், தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது என்பதில் இன்றைய பத்திரிகை ஊடகங்கள் கூர்ந்து கவனிக்கின்றன.

கடந்தகால வரலாற்றை திரும்பிப் பார்க்கும்போது திராவிட முன்னேற்றக் கழகம் ஜனநாயகத்தை முழுமையாகவும் உணர்வுபூர்வமாகவும் ஏற்றுக்கொண்ட மக்கள்இயக்கம் என்பதோடு ஜனநாயகத்திற்கு இந்திய ஒன்றிய ஆட்சிமுறையில் எப்பொழு தெல்லாம் ஆபத்து ஏற்படுகின்றதோ அப்பொழுதெல்லாம் அதை தயவுதாட்சன்யமின்றி எதிர்த்துப் போராடியது மட்டு மல்லாமல், அதற்காக சர்வபுரி தியாகங்களையும் செய்த மாபெரும் இயக்கம் என்பதை நெருக்கடி காலத்தின் வரலாறு வலுவாக பதிவு செய்திருக்கிறது.

இப்படியாக ஜனநாயகத்தைப் பாதுகாப்பதிலும், நடைமுறைப்படுத்து வதிலும் எத்தகைய இடர்ப்பாடுகள், தடைகள், அச்சுறுத்தல்கள் வந்தாலும் அவைகளையெல்லாம் தகர்த்து தரைமட்டமாக்கிவிட்டு, ஜனநாயகத்தை பாதுகாத்த மாபெரும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை பலநெருக்கடியான காலகட்டங் களில் மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் நிரூபித்து காட்டி யிருப்பதை காலக் கண்ணாடி இன்றைக்கும் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது. அதன் வெளிப்பாடுதான் இன்றைய தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பண்பட்ட தலைமையில் ஜனநாயக மாண்புகளையும், மரபுகளையும் தங்களின் உயிர்மூச்சாக கருதக்கூடிய அளவிற்கு உடன்பிறப்புகளை பக்குவப்படுத்தி மறுசீரமைப்பு மூலம் நாடெங்கும் பாசறைகளை பலப்படுத்திருக்கிறார்.

ஆனால், இன்றைய ஒன்றிய அரசின் ஆட்சிபீடத்திலுள்ள பாரதிய ஜனதா கட்சியும் அதன் ராஜகுருவான மற்றும் ரிஷி மூலமான "ராஷ்டிரிய சுயம்சேவக்சங்" (RSS) அமைப்பும் ஒருங்கிணைந்து இந்திய அரசியல் சட்டம் (Constitution of India) முன்வைக்கின்ற ஜனநாயக குடியரசை (Democratic Republic) சீர் குலைக்க முயற்சிக்கும்போதெல்லாம் அவற்றை முனைமழுங்கச் செய்யும் வகையில் திராவிட முன்னேற்றக் கழகம் நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும், நீதிமன்றங்களிலும், மக்கள் மன்றங்களிலும் வாதாடியும் போராடியும் வந்திருப்பதை வரலாற்றின் வழிநெடுகிலும் பார்க்க முடியும்.

பொன். முத்துராமலிங்கம்
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்
திட்டக்குழு உறுப்பினர்



பொதுவாக ஜனநாயகத்தில் ஆட்சியில் உள்ளவர்கள் தங்கள் அதிகார வரம்பைமீறி, தவறிழைப்பார்களேயானால், அந்தத் தவறுகளை சுட்டிக்காட்டி வாதாடுவதும், தேவைப்பட்டால் அறவழியில் போராடுவதும் எதிர்க்கட்சிகளின் கடமையாகும். அதன்மூலம் ஆட்சிபீடத்தில் உள்ளவர்கள் தங்களை திருத்திக்கொள்வதற்கும், மாற்றிக்கொள்வதற்குமான வாய்ப்பும், வழிமுறையும், வாசலும் திறக்கும்.

அந்தவகையில், கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் சார்பாக "டெல்லிஜந்தர்மந்தர்" தொடர் போராட்டத்தை ஒடுக்குவதற்கான முயற்சிகளை இன்றைக்கு இந்திய ஒன்றியத்தில் ஆட்சியிலுள்ள பாரதிய ஜனதா கட்சி அரசு பலவழிகளிலும் முறைகேடாக முயன்று வந்தது என்பதை ஊடகச் செய்திகள் உலகிற்கு படம்பிடித்துக் காட்டியது.

குறிப்பாக போக்குவரத்து வசதிகளான மெட்ரோ ரயில், பேருந்து வசதிகள், மற்ற தொலைதொடர்பு சாதனங்கள் அனைத்தும் ஜனநாயகத்தின் ஓட்டத்தை முடக்கப் பார்த்ததை அனைவரும் அறிவர். இதன்மூலம், பொதுமக்களுடைய அன்றாட வாழ்க்கையின் அத்தியாவசிய நடவடிக்கைகள் முழுமையாக பாதிக்கப்பட்டு மக்கள் பெரும் அவதிக்கும்தொல்லைக்கும்ஆளாகியிருக்கின்றனர்.

மேலும் டில்லி, இந்திய ஒன்றியத்தின் தலைநகர் என்பதால் நாடு முழுவதும் ஏதோ ஒருவகையில் ஒன்றிய அரசோடு தொடர்புகொள்ள முடியாத சூழ்நிலையே நிலவியது. ஆம்! அவசர அத்தியாவசிய தேவைகளுக்குக்கூட தொடர்புகொள்ள முடியாத அசாதாரண சூழ்நிலை தலைநகரில் உருவாகியிருந்தது. இந்தப் பிரச்சினை யில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் தெளிவானதும், தீர்க்கமானதுமான கோரிக்கைகளை முன்வைத்து அதற்கான தீர்வுகளை யும், நியாயங் களையும் வெளிப்படையாகத் தெரிவித்துவிட்டு போராட்டக்களம் அமைத்த சூழ் நிலையில், அந்தப் போராட்டத்தை முடக்குவதற்கும் அடக்குவதற்கும் ஒன்றிய பா.ஜ.க அரசு மேற்கொண்ட அடாவடியான கொல்லைப்புற நடவடிக்கைகள் அவசியம்தானா? என்பதை நாட்டுமக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

போராட்டக்காரர்கள் பெரும்பாலும் இருபால் இளைஞர்கள்தான் என்பதனால் அவர்களது எதிர்காலம் பாதிக்கப்படுவது என்பதற்காக ஜனநாயக வழிமுறைகளைப் பின்பற்றி அறப்போராட்டத்தை நடத்துவதை நாடும் ஏடும் நன்கு அறியும். அவர்களது அந்தப் போராட்டத்தின் நியா யங்களை தேவைகளை உணர்ந்து ஒன்றிய அரசு அவர்களை அழைத்து சமூகமாகப்பேசி தீர்வு கண்டிருக்கலாம். அதற்குமாறாக இந்த ஜனநாயக வழிமுறையை வேண்டுமென்றே புறந்தள்ளிவிட்டு "ஜந்தர்மந்தர்" போராட்டத்தை ஒடுக்குகின்ற முயற்சியினைத்தான் ஒன்றிய பா.ஜ.க அரசு முன்னெடுத்து வந்ததை அனைத்துத் தரப்பினரும் அறிவர்.

இத்தகைய அரசியல் சூழ்நிலையில் ஜனநாயக உணர்வுகளையும் அதன் அடிப்படையிலான கோரிக்கைகளையும் முன்வைத்து போராடுகின்ற காக்ரோச் ஜனதா கட்சி உள்ளிட்ட ஜனநாயக சக்திகளுக்கு ஊக்கமூட்டுகின்ற வகையில் ஆதரவளித்து, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கை இந்திய ஜனநாயகத்திற்கு பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்ட மகுடமாகும்.

1965இல் "இந்தி" எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்த மாணவர்கள் எதிர்கால நலன்கருதி அறிவுலக மேதை அண்ணா அவர்கள், மாணவர்கள் இதுவரையில் போராடியது சரி, இனி போராட்டத்தை மக்கள் பிரதிநிதிகளிடம் விட்டுவிடுங்கள் என்று வகுத்த வியூகத்தைப் போல இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள ஆதரவு அறிக்கை என்பது திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் ஜனநாயகத்தின் சரணாலயம் என்பதில் அழுத்தம் திருத்தமாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆகையால், இந்திய ஒன்றியத்தின் இருபால் இளைஞர்களிடையே கழகத் தலைவர் காலத்தே விதைத்துள்ள விழிப்புணர்வுப் பாதையில் செல்வோம்! வெல்வோம்!! போராட்ட வெற்றியை அறுவடை செய்வோம்!!!

நிவேதா எம்.முருகன் தலைமை!

மயிலாடுதுறை தொகுதி - மறு சீரமைப்பு குழு கலந்துரையாடல் கூட்டம்!

கோவி.செழியன் எம்.எல்.ஏ. - துரை கி.சரவணன் சிறப்புரை!

மயிலாடுதுறை, அக். 19 -

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர.பேரூர் கழக செயலாளர், மாவட்ட சார்பு அணிகளின் அமைப் பாளர்களுடன் கழக மறு சீரமைப்பு குறித்த கலந்துரையாடல் கூட்டம் மயிலாடுதுறையில் விஜய் மஹாலில் நடைபெற்றது கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி கல்யாணம் முன்னிலை வைத்தார். கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டத்திற்கான தலைமைக் கழக பிரதிநிதிகள் முன்னாள் அமைச்சர் கோவி.செழியன் எம்.எல்.ஏ., மாநில் பொறியாளர் அணி தலைவர் துரை கி.சரவணன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள் செல்வம், விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் ஜக.வீரபாண்டி யன், மாநில கல்வியாளர் அணி துணை செயலாளர் ஆர். ராஜ்குமார்,

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் எஸ்.செல்வமணி, கண்ணகி பன்னீர், ஒன்றிய கழக செயலாளர்கள் மூவலூர் எம்.மூர்த்தி, என். இளையபெருமாள், ஞான. இமையநாதன், பி.முருகமணி, கு. வைத்தியநாதன், மயிலாடுதுறை நகர கழக செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் பேரூர் கழக செயலாளர்கள் எம். சம்சுதீன், அண்ணாதுரை. பொதுக்குழு உறுப்பினர்கள் பி. சிவதாஸ், அ. காந்தி, எஸ்.சங்கரநாராயணன், ஹர்ஷத, நத்தம் வின்சென்ட், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எம்.கே. மருது, ஆ.எஸ்.ஸ்ரீதர், வி.எஸ். பிராபாகர், இரா. மனோகரன், பெருவீரமணி, தீபா சத்யந்திரன் டி ராஜ்குமார், க.அறிவழகன் மற்றும் கழக நிர்வாகிகள் ஆர். கே.சங்கர், மலைக்க மலைக்கோயில் பிரபாகர், ஆர்.கே.சரவணன், கே. எஸ்.கண்ணன், எஸ்.செல்வமணி, எஸ்.குமார், குரு மூர்த்தி, கே.ராஜேந்திரன், ஜி.அசோகன், எஸ்.வெங்கடேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கூலூரில் அமைந்துள்ள கோவை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி ஆலோசனையின் படி கழக மறுசீரமைப்புக்கான கோவை தெற்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் நடைபெற்றது. இதில் மறு சீரமைப்புக் குழு தலைமை கழக பிரதிநிதிகள் எஸ்.ஆர்.பார்த்திபன், ரேகா பிரியதர்ஷினி உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்ட கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

சென்னையில் விடிய விடிய கொட்டித் தீர்த்த கனமழை!

சென்னை, அக். 19 - சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று முன் தினம் மாலை தொடங்கிய மழை பரவலாக இரவு வரை நீடித்தது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை கடந்த 15ம் தேதி தொடங்கியது. அன்றே சென்னை மற்றும் புறநகரில் ஆங்காங்கே, விட்டு விட்டு மிதமான மழை பெய்தது. 16ம் தேதி இரவு சுமார் 7 மணி அளவில் பரவலாக மழை பெய்யத் தொடங்கியது. தொடர்ந்து பலத்த இடி, மின்னலுடன் கனமழை பெய்தது.

நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை கடும் வெயில் வாட்டிய நிலையில், மாலை 6 மணிக்கு மேல் வட சென்னை பகுதியில் மழை தொடங்கி, பின்னர் மாநகர், புறநகர் பகுதிகளுக்கும் பரவி இரவு 8 மணிக்கு பிறகு இடி, மின்னலுடன் கூடிய கனமழை நீடித்தது. சாலைகளில் மழைநீர் தேங்கியதால், வாகனங்கள் ஊர்ந்து சென்றன.

ஈரோடு ஒன்றிய செயலாளர் டி.சதாசிவம் தந்தை

தோப்புதுரை (எ) எம்.துரைசாமி மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

ஈரோடு, அக். 19 -

ஈரோடு ஒன்றிய கழக செயலாளர் தோப்பு டி.சதாசிவம் தந்தையும், மேட்டு நாசுவம்பாளையம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவருமான தோப்பு எம்.துரைசாமி (வயது 88) அவர்கள், 17.10.2026 - சனிக் கிழமை இரவு 9.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

ஈரோடு ஒன்றிய கழகச் செயலாளர் தோப்பு டி.சதாசிவம் தந்தை

தோப்பு எம்.துரைசாமி மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

ஈரோடு, அக். 19 -

ஈரோடு ஒன்றிய கழக செயலாளர் தோப்பு டி.சதாசிவம் தந்தையும், மேட்டுநாசுவம்பாளையம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரு மான தோப்பு எம்.துரைசாமி (வயது 88) அவர்கள் 17.10.2026 - சனிக் கிழமை இரவு 9.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



அன்னாரின் மறைவு செய்தியறிந்த மாநில, மாவட்ட, மாநகர், நகர, ஒன்றிய, பேரூர், ஊராட்சி, வார்டு, கிளைக்கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

இவரது மகள் கலைச்செல்வி, ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி துணைத் தலைவராக உள்ளார்.



கோவை காந்திபுரத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த மாவட்ட கழக அலுவலகத்தில் கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி ஆலோசனையின் படி கழக மறுசீரமைப்புக்கான கோவை மாநகர் மாவட்ட கழக செயற்குழு கூட்டம் கோவை மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் தலைமையில் நடைபெற்றது. இதில் மறு சீரமைப்புக் குழு தலைமை கழக பிரதிநிதிகள் எஸ்.ஆர்.பார்த்திபன், ரேகா பிரியதர்ஷினி உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்ட கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கோவை காந்திபுரத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த மாவட்ட கழக அலுவலகத்தில் கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி ஆலோசனையின் படி கழக மறுசீரமைப்புக்கான கோவை வடக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் நடைபெற்றது. இதில் மறு சீரமைப்புக் குழு தலைமை கழக பிரதிநிதிகள் எஸ்.ஆர்.பார்த்திபன், ரேகா பிரியதர்ஷினி உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்ட கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.